ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

விலை ரூ. 30/=

வரவு - செலவு திட்டமல்ல பொய்களின் மூட்டை!

எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, நவ. 10 வரவு - செலவு திட்டம் என்ற பெயரில் அநுர குமார திஸநாயக்க பொய்களின் மூட்டையையே முன் வைத்துள்ளார். இதில் மக்களுக்கு ஏமாற்றமும் நேர்மையின்மையுமே நிறைந்துள்ளது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை - ஹொரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் 07

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.11.2025 திங்கட்கிழமை இதழ் : 314 பக்கங்கள் : 08

மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்காளி கட்சிகளுடன் பேசி முடிவு!

- நிபந்தனைகள் என்னவென அறிய வேண்டும்
- காழ்ப்புணர்ச்சியால் எம்மீது பொய்பிரசாரம்

-குமார. கோகுலன்-

வவுனியா, நவ. 10

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக நாம் இன்று பயணித்துக் கொண்டிருக்கிறோம். அத்துடன், தமிழ்த் தேசிய பேரவையுடன் புரிந்துணர்வு ஒன்றையும் மேற்கொண்டிருக்கிறோம். மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவது தொடர்பில் அங்கத்துவ கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்போம் - என்று ரெலோ கட்சி அறிவித்துள்ளது.

அத்துடன், தமது கட்சிமீது காழ்ப்புணர்ச்சி கொண்ட அல்லது அரசியல் ரீதியாக சேறு பூசவேண்டும் என்று சமூக ஊடகங்களில் பொய்ப் பிரசாரங்கள் பரப்பப்படுகின்றன என்றும் 07

போதைப்பொருட்களுடன் யாழ். நகரில் 23 பேர் கைது

- கைதானோரில் ஒருவர் சிறுவன் -

யாழ்ப்பாணம், நவ. 10 போதைப் பொருட்களுடன் 17 வயது சிறுவன் உட்பட 23 பேர் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் 07

மானிப்பாயில் கைதானோர் குறித்து விசாரணை ஆரம்பம்

அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, நவ. 10 கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மானிப்பாயில் கைது செய்யப்பட்ட மூவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மானிப்பாயில் கைது 07

யாழ். வாசிகள் இருவர் துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, நவ. 10 யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கைத்துப்பாக்கியுடன் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற கார் ஒன்றை பொலிஸார் துரத்திச் சென்று பிடித்தனர். அந்தக் காரை பொலிஸார் சோதனையிட்டபோது, சாரதியின் இருக்கையின் 07

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சரணடைய விருப்பம்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, நவம்பர் 10 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஏழு பேர் சரணடைவதற்கு அதிகாரிகளிடம் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று பொது மக்கள் 07

உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, நவ. 10 கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டுள்ளன 07

தொல்பொருள் ஆலோசனை குழு: சிறுபான்மையினருக்கு இடமில்லை

கொழும்பு, நவ. 10 தொல்பொருள் ஆலோசனை குழுவுக்கு 19 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில், சிறுபான்மை இனத்தவர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவியால் வெளியிடப்பட்டவர்த்தமானி அறிவித்தலின்படி, இந்தக் குழுவுக்கு வேதருவே தர்ம கீர்த்தி சிறீ ரத்னபால உபாலி தேரர் தலைவராக செயல்படுவார்.

அவர் தவிர, பஹமுனே சிறீ 07

இலஞ்சம், ஊழல் விசாரணை குழு அரசியல் நோக்கில் செயல்படுகிறது

சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10 இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய - தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் செயல்படுகிறது - இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் ஐக்கிய குடியரசு முன்னணியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பொருளா தார 07

மாகாண சபைகள் தேர்தல்:

சர்வ கட்சி கூட்டத்தை கூட்ட பிரதமரை கோருவார் சஜித்?

கொழும்பு, நவ. 10 மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் விதம் பற்றி ஆராய்ந்து இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்காக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறு பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுக்கவுள்ளார் என்று தெரிய வருகிறது.

இது தொடர்பில் பிரதமருக்கு இன்றைய தினம் எழுத்துமூலம் தெரியப்படுத்தப்படலாம் என்று எதிர்க்கட்சி தலைவர் பணிமனை வட்டாரங்கள் 07

தோட்ட தொழிலாளருக்கு ஜனவரி முதல் 1,550 ரூபாய்

முதலாளிமார் சம்மேளனம்

கொழும்பு, நவ. 10 மலையக பெருந் தோட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அறிவித்தமைக்கு அமைய அடிப்படை வேதனமாக ஆயிரத்து 550 ரூபாயை எதிர்வரும் ஜனவரி முதல் வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடக பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவிக்கையில், மலையகப் 07

வலிப்பால் இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 10 வலிப்பு ஏற்பட்ட இளைஞர் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று உயிரிழந்தார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த சிவானந்தன் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டனர்!

முல்லைத்தீவு, நவ. 10

முல்லைத்தீவு, முள்ளிய வளை, விசுவமடு, குமுழமுனை, முறிப்பு, மாமூலை, வற்றாப் பளை , கேப்பாபிலவு, தண்ணீ ரூற்று ஆகிய பிரதேசகளை சேர்ந்த மாவீரர்களின் பெற் றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

உலக தமிழரின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்று பிரதேச சபை யின் உறுப்பினர் ஞானதாஸ் யூட்சன் தலைமையில் இந்த நிகழ்வு முள்ளியவளையில் நேற்று நடைபெற்றது.

மாவீரர்களின் பெற்றோர் மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

பின்னர், மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட் டது. இதைத் தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர்கள் மதிப்பளிக்கப்பட்டு, மரக்கன் றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற் பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

குருநகர் கடற்கரை சுத்தம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் நகரின் புறநகர் பகுதியான குருநகரின் கடற்கரை யோரம் நேற்று சுத்தப்படுத்தப் பட்டது.

குருநகர் ஐந்து மாடி பகுதி யில் அலுப்பான் தீவுப்பகுதி வரையான கடற்கரை பிரதேசம் தூய்மையாக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை யின் பிரதி முதல்வர் இமானு வேல் தயாளன், உறுப்பினர்க ளான ஜெகதீஸ்வரன் மயூரன், சிறீ ராஜ குலேந்திரன் சாருஜன் எனப் பலர் இந்தப் பணியில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

சாணக்கியனின் தந்தைக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி!



கொழும்பு, நவ. 10

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இரா. சாணக்கியனின் தந்தை யின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அத்துடன், பொரளையில் உள்ள தனியார் மலர்ச்சாலை யில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடலுக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செய லாளர் எம். ஏ.சுமந்திரன், கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக் கது. (ஐ)

கசிப்பு உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் முற்றுகை

சந்தேகநபர் தப்பியோட்டம்

முல்லைத்தீவு, நவ. 10

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவின் உடையார்கட்டு - குரவில் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.

இந்த சோதனையின்போது பொலிஸாரை கண்டதும சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். இந்த நிலையில், அங்கிருந்த 250 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட் டது என்று பொலிஸார் தெரி வித்தனர்.

இந்நிலையில, தப்பியோ டிய சந்தேக நபரை அடையா ளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவரை கைது செய்வ தற்கான நடவடிக்கை முன்னெ டுக்கப்படுவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ)

3 கிலோ ஐஸ்டன் ஒருவர் கைது!

சிலாபம், நவ. 10

3 கிலோ "ஐஸ்" போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - முல்லைநகரில் வைத்து பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர். பொலி ஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம் பெற்றது. இதன் போது, 3 கிலோ ஐஸ் போதைப் பொருள் கைப் பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் புத்த ளம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை நடத்தி வருகிறது. (ஐ)

புழல் சிறையிலுள்ள இலங்கையர் குடும்பத்தவரை சந்திக்க அனுமதி

சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, நவ. 10

தமிழகத்தின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங் கையை சேர்ந்த கைதி ஒருவரை அவரின் குடும்பத்தினர் சிறை யில் சந்திக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

இலங்கையைச் சேர்ந்த 44 வயதான புஷ்பராஜ் என்ற குறித்த கைதி கடந்த 2022ஆம் ஆண்டில் சட்டவிரோத நட வடிக்கைகள் தடுப்புச் சட்டத் தின் கீழ் இந்திய தேசிய புலனாய்வு முகவரகத்தினால் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டும் இவர்மீது சுமத்தப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள புஷ்பராஜ், சிறையில் தனது குடும்ப உறுப்பினரைச் சந்திக்க அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் அமர்வு, "தமிழக அரசு ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பின்படி, மனுதாரரைச் சந்திக்க அவரது குடும்பத்தின ருக்கு அனுமதி அளிக்க வேண் டும்" எனப் புழல் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்துள் ளது. (ஐ)

இன்று முதல் 27ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கில் மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 10

வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் பல பகுதிகளுக்கும் இன்று திங்கட்கிழமை முதல் எதிர் வரும் 27ஆம் திகதி வரையில் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப் புள்ளது. 25 - 27ஆம் திகதி வரையில் கனமழை பெய்யும் என யாழ். பல்கலைக்கழக புவி யியற்துறை தலைவர் பேரா சிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய காற்றுச் சுழற்சி எதிர்வரும் 18ஆம் திகதி வரை வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு கிழக்காக, தென் கிழக்காக என அங்குமிங்கும் அலைந்து இலங்கைக்கு கீழாக குமரிக்கடலை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் எதிர்வரும் 19ஆம் திகதி இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாநிலம் அருகே வங்காள விரிகுடாவில் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலையில் இது புயலாக மாறி தமிழ்நாட்டில் கரையைக் கடக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால், இந்தத் தாழமுக்கத்தின் விருத்தி, கரையைக் கடக்கும் இடம் என்பனவற்றை எதிர்வரும் 15 ம் திகதிக்கு பின்னரே உறுதிப்ப டுத்த முடியும்.

ஆனாலும், இன்று திங்கட் கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இந்த ஆண்டுக்கான வடகீழ்ப் பருவமழை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் அதிகரிப்ப தோடு தொடர்ச்சியாக கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 27 ஆம் வரை வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் மழை தொடரும்.

கடந்த பல வருடங்களாக நவம்பர் 25, 26, 27ஆம் திகதிக ளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கன மழையைப் பெறுவதுண்டு. இவ்வருடமும் அது தொடரும். இவ்வாறான காலநிலை மாற்றம், எதிர்காலத் தில் பல வியக்கத்தக்க ஆச்சரி யங்களையும், விரும்பத்தகாத மாற்றங்களையும் எங்கள் பிரதேசங்களின் வானிலை கோலங்களில் ஏற்படுத்தும் - என்றார். (ஐ)

விசேட தேவையுடைய மாணவர்களின் திறன் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 10

வடக்கின் மூன்று மாவட்டங் களை விசேட தேவையுடைய மாணவர்களின் திறனை வெளிப் படுத்தும் நிகழ்ச்சி நாளை செவ் வாய்க்கிழமை கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

ஜேசாக் (JSAC) நிறுவனத்தின் அனுசரணையில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்க வுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேத நாயகன் கலந்து கொள்ளவுள் ளார். (ஐ)



சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை மையத்தின் ஒழுங்கமைப்பில் "அரசியல தீர்வும் - பொறுப்புக் கூறலும் : ஓர் எண்ணிம ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு" நேற்றைய தினம் யாழ். நகரிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றபோது...

இரத்த தான முகாம்

யாழ்ப்பாணம், நவ. 10

சங்கானை நிகரை இந்து இளைஞர் மன்றத்தின் அனுசர ணையில் நிகரை அம்பாள் சனசமூக நிலையம் இரத்த தான முகாமை நடத்தியது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நிகரை ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த இரத்தான முகாமில் பெருமள வான இளைஞர்கள் குருதிக் கொடை வழங்கினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார இதழ்
ஈழநாடு
Eelanadu 10.11.2025 திங்கட்கிழமை ඊළනාඩු
விசுவாவசு வருடம், ஐப்பசி 24
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

அரசியல் தீர்வு பற்றி உரையாடுதல்

தமிழ் சூழலில் இப்போதும் அரசியல் தீர்வு பற்றி உரையாடப்படுகிறது. அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் அரசியலில் ஆர்வமுள்ளவர்களும் இவ்வாறான உரையாடல்களில் ஆர்வம் காண்பிக்கின்றனர். ஆனால், பெரும்பாலான தமிழ் மக்களோ இவ்வாறான விடயங்களில் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்களா என்னும் கேள்வி உண்டு. இவ்வாறு தீர்வு பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போதே தமிழர் அரசியல் தரப்புகள் மேலும் பலவீனமடைந்து கொண்டு செல்கின்றன என்பதுதான் உண்மை. ஏனெனில், இலங்கைத் தீவின் இதுவரைகால அரசியல் அனுபவம் என்பது கொழும்பின்மீது அழுத்தங்கள் இன்றி எந்தவோர் அரசியல் தீர்வு முயற்சிக்கும் அவர்கள் இணங்கப் போவதில்லை என்பதாகும். ஆனால், கொழும்பின்மீது எவ்வாறு அழுத்தங்களை பிரயோகிப்பது - அதனை யார் பிரயோகிப்பார்? பதில் எவரிடமும் இல்லை. அரசியல் தீர்வு பற்றி உரையாடுபவர்களிடம் பதில் இல்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புதிய அரசியல் யாப்பு ஒன்று வரும்போது தமிழர் பிரச்னைகள் தொடர்பில் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைப்பது என்பது பற்றிப் பேசப்படுகிறது. இலங்கையின் அரசியல் யதார்த்தம் என்னவென்றால் அரசமைப்பில் இருப்பவற்றைக் கூட அதிகமென்று வாதிடுவோர் இருக்கின்றனர். குறிப்பாக, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது என்பதில் கொழும்பின் பிரதான அரசியல் அணியினர் அனைவருமே உடன்படுகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் புதிய அரசியல் யாப்பின் மூலம் இருப்பவற்றை விடவும் சிறப்பான அதிகாரங்களைக் கொண்ட - வழங்கப்படுபவற்றை மீண்டும் பறித்தெடுக்காத வகையிலான அதிகாரப் பகிர்வு ஒன்றை எவ்வாறு சாத்தியப்படுத்த முடியும்? இதற்கான பதில் எவரிடமும் இல்லை. விடயங்களை கோருவதற்கு தமிழர் பக்கத்தில் நியாயம் உண்டு என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. ஆனால், நடைமுறையிலுள்ள ஒரு பிரதான பிரச்னை - தமிழர்கள் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டமொன்றை முன்னெடுத்து அதில் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

"ஒஸ்லோ பேச்சின்போது - ஆயுதங்களைக் கைவிடுவது என்பது பேச்சுக்கு அப்பாற்பட்டது. ஏனெனில், ஆயுதங்கள் என்பது எங்களுடைய மக்களின் அதிகாரமாகும் - பேரம் பேசும் பலமாகும்", என்று அன்ரன் பாலசிங்கம் அழுத்திக் குறிப்பிட்டார். உண்மையில், ஆகக்கூடிய அதிகாரங்களை பேரம் பேசிப் பெறுவதற்கான உச்சமான காலப்பகுதியாகவே அன்றைய சூழல் இருந்தது. ஆனால், மீண்டும் விடுதலைப் புலிகள் யுத்தத்தைத் தெரிவு செய்தபோது குறித்த பேரம் பேசும் பலத்தை அழிப்பதே அரசின் பிரதான இலக்காக இருந்தது. இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டது.

இதன் பின்னர் போரில் தோல்வியுற்ற ஒரு தரப்பை அணுகும் வகையிலேயே ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை அணுகினர். தற்போதுள்ள அரசாங்கம் அவ்வாறான தன்மையை வெளிப்படுத்தவில்லை. நல்லிணக்கம் தொடர்பில் தங்களுக்குக் கரிசனை இருப்பதாகவும் அனைத்து மக்களையும் சமமாக நடத்த வேண்டும் என்றும் கூறினாலும்கூட, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று வருகின்றபோது எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்காத அரசாங்கமாகவே இருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்ச்சூழலில் இடம்பெறும் அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்கள் அனைத்தும் அரசுசாரா நிறுவன வேலைத் திட்டங்களாக இருக்கலாமே தவிர, அதற்கப்பால் ஒரு சிறு அடியை எடுத்து வைக்கக்கூடிய முயற்சிகளாக இருக்கப் போவதில்லை. ஏனெனில், நாம் பேசும் விடயங்களை நடைமுறைக்குக் கொண்டு செல்வதற்கு எம்மிடம் பலமில்லை - அதேவேளை வெளியக ஆதரவும் எமக்கில்லை.

எங்கள் கணிப்பு தவறு என்பதை ஏற்கிறோம்!

ஹர்ஷ டீ சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

நாட்டின் நிதி இலக்குகள் அடையப்பட்டமைக்கு எதிர் பாராத வகையில் நிகழ்ந்த வாகன இறக்குமதியே முதன்மை காரணம். நாங்களும் இதனை எதிர்பார்க்கவில்லை - எங்களுடைய கணிப்பு தவறாகிவிட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், இத்தகைய எண்ணிக்கையிலான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இதுவே அரசாங்கத்துக்கு வருமானத்தை தந்துள்ளது. நாங்களும் இதனை எதிர் பார்க்கவில்லை, எங்களுடைய கணிப்பு தவறாகிவிட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

மேலும் 190 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான நாணய கடிதங்கள் திறக்கப்பட்டன. இதில், 140 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியுடைய வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

இதன் விளைவாக, யாரும் நினைத்துப் பார்க்காத வகையில் அரசாங்கத்துக்குக் கணிசமான வரி வருமானம் கிடைத்துள்ளது - என்றார். (ஐ)

மீன் வியாபாரி கொலை:

சந்தேகநபர்கள் மூவர் கைது

கொழும்பு, நவ. 10

அம்பலாங்கொடையில் மீன் வியாபாரி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை, போரம்ப பகுதியைச் சேர்ந்த 54 வயது மீன் வியாபாரி அம்பலாங்கொடை நகராட்சி மன்ற நூலகத்திற்கு முன்பாக கடந்த 4ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிவப்பு நிற காரில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் இந்தக் கொலையைச் செய்துவிட்டு தப்பிச் சென்றிருந்தனர். (ஐ)

கொழும்பில் மாடி குடியிருப்பு நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 10

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான தொடர்மாடி குடியிருப்பு நிர்மாணத்துக்காக 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட முன்மொழிவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (எ)

நாட்டில் இடம்பெற்ற விபத்துக்களில் 8 வயது சிறுவன் உட்பட நால்வர் பலி!

கொழும்பு, நவ. 10

நேற்றுக்காலை 08. 00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் சில பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 8 வயது சிறுவன் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கள் மாத்தளை, தனமல்வில, வெலிகந்த மற்றும் கொட்டவில பொலிஸ் பிரிவுகளில் இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அசேலபுர பகுதியில் உழவியந்திரம் ஒன்று வீதியால் பயணித்த 8 வயது சிறுவன் மீது மோதியது. இதில் காயமடைந்த சிறுவன் வெலிகந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

இதேவேளை கண்டி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஓட்டோ ஒன்று பாதசாரி மீது மோதியது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த பாதசாரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 70 வயது நபர் என பொலிஸார் கூறினர்.

இதேவேளை தனமல்வில - வெல்லவாய வீதியில் வான் ஒன்றும் டிப்பர் ரக வாகனும் நேருக்கு நேர் மோதியதில் வான் சாரதி உயிரிழந்தார்.

இதேநேரம் கொட்டவில பகுதியில் உழவியந்திரம் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வர் உயிரிழந்தார். (எ)

அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிழநாடு

தேசிய மட்ட விளையாட்டு போட்டியில் சாதித்த மாணவர்கள் கௌரவிப்பு



வவுனியா, நவ. 10

தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் வவுனியா மாவட்டத்தை பிரதி நிதித் துவப் படுத்தி வெற்றி வாகை சூடிய வீர வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இம்முறை நடைபெற்ற தேசிய மட்ட விளையாட்டு போட்டியில் அரை மரதனில் முதலாம் இடத்தையும் 5000 மீற்றரில் புதிய சாதனையும் 1500 மீற்றரில் இரண்டாம் இடத்தையும் விகிர்தன் பெற்றுக் கொண்டதுடன், பரிதி வட்டம் வீசலில் கிருசிகன் முதலாம் இடத்தையும் பளு தூக்கலில் கோசிகா முதலாம் இடத்தையும் பெற்று வவுனியா மாவட்டத்துக்கு பெருமை சேர்த்தனர்.

தேசிய மட்ட ரீதியில் வவுனியா மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த குறித்த மூவருக்குமான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது வவுனியா பழைய பேருந்து நிலையத்தருகே மாலை அணிவித்து பாண்ட் வாத்தியம் முழங்க வலயக்கல்வி அலுவலக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மூவருக்கும் பொன்னாடை போர்த்தி, பதக்கங்கள் அணிவித்து, நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

வவுனியாவில் சிறுவர்களின் ஓவிய கண்காட்சி



வவுனியா, நவ. 10

கிட்ஸ் கிரியேட்டிவ் ஆர்ட்ஸின் சிறுவர்களின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சிறார்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த ஓவியக் கண்காட்சியில் பல்வேறு ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கட்புட ஆற்றுகை கலை பீடத்தின் பீடாதிபதி ரி. றொபேட் அருட்சேகரம் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்பினர், சிறார்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

கொழும்பு வடக்கு உட்பட 7 பொலிஸ் பிரிவுகளில் குற்ற கும்பல்கள் அதிகம்

ரஜீவன் எம். பியின் கேள்விக்கு அமைச்சர் பதில்

கொழும்பு, நவ. 10

கொழும்பு வடக்கு, நுகேகொட, கம்பஹா, எல்பிட்டிய, தங்காலை, காலி மற்றும் மாத்தறை பொலிஸ் பிரிவுகளிலேயே திட்டமிட்ட குற்றக் கும்பல்களின் செயல்பாடுகள் அதிகளவில் இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது, நாட்டில் நடக்கும் திட்டமிட்ட குற்றக் கும்பல்களின் செயல்பாடுகள் தொடர்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரஜீவன் எம். பி. முன்வைத்த கேள்விகள் வருமாறு,2020 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கும்பல் வன்முறை அல்லது கும்பல் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் பொலிஸில் பதிவுசெய்யப்பட்டுள்ள சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் அல்லது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்பு அல்லது பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும் மாகாண ரீதியாக வெவ் வேறாகவும் கும்பல் வன்முறை தொடர்பாக, பொலிஸாருக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்கும் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகள் உள்ளடங்கலாக அனைத்து மாகாணங்களிலும் சட்டங்களையும் சட்டச் செயன்முறைகளையும் சமச்சீராக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்,

கும்பல் வன்முறையால் பாதிக்கப்படக்கூடிய உயர் அபாயநேர்வுடைய ஏதாவது மாவட்டங்களை அல்லது பிரதேசங்களை அமைச்சு அடையாளம் கண்டுள்ளதா? என்பதையும் அவ்வாறாயின், அத்தகைய மாவட்டங்களில், பிரதேசங்களில் கும்பல் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிப்பாரா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஆனந்த விஜேபால,நாடு முழுவதும் ஒரே வகையில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகள் பொலிஸ் கட்டளைகள் சட்டத்தின் கீழ் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டில் அதிகளவிலான திட்டமிட்ட குற்றக் கும்பல்களின் செயல்பாடுகள் தென் மற்றும் மேல் மாகாணங்களிலேயே நடக்கின்றன. இவற்றில் கொழும்பு வடக்கு நுகேகொட, கம்பஹா, எல்பிட்டிய, தங்காலை, காலி மற்றும் மாத்தறை பொலிஸ் பிரிவுகளிலேயே அதிகளவான சம்பவங்கள் பதிவாகின்றன.

எவ்வாறாயினும் நாடு முழுவதும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் உளவு பிரிவுகள் செயல்படுகின்றன. விசேட தேடுதல் மற்றும் ரோந்து நடவடிக்கைகளும் நடக்கின்றன.

அத்துடன் குற்றவாளிகள் தப்பிச் செல்ல முடியாதவகையில் விசேட பாதுகாப்பு, கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்ற பாலியல் கல்வி மூலம் பிள்ளைகளை திசைதிருப்பும் திட்டம்

கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

பாடசாலை பாடத்திட்டத்தில் பொருத்தமற்ற பாலியல் கல்வியை உள்ளடக்குவதன் மூலம் சிறுவர்களை தவறான வழியில் திசைதிருப்பும் திட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

மீரிகம, கீனதெனிய பகுதியில் புனரமைக்கப்பட்டுள்ள புனித முடியப்பர் தேவாலயத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துகளை வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இப்போது சிறுவர்களுக்கு ஆறாம் தரம் முதல் பாலியல் கல்வி வழங்க ஒரு புதிய பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். இந்த விடயங்கள் குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன.

இந்தக் கல்வித் திட்டத்தில் குறிப்பாக, தன்பால் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது பற்றியும் பிறப்பு கட்டுப்பாடு பற்றியும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய அனைத்து விடயங்களுக்கு பின்னாலும் இருப்பது, நம் நாட்டைக் கெடுக்கத் துடிக்கும் சர்வதேச அமைப்புகளே. குறிப்பாக ஐக்கிய நாடுகள் குடும்பக் கட்டுப்பாட்டு சங்கம் இந்தக் கல்வி அமைச்சுக்கு பணம் கொடுத்து, அதற்கான புத்தகங்களை அச்சிட்டு, இன்று நாட்டில் இந்தப் பிள்ளைகளைத் தவறான வழியில் கொண்டு செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த நாகரிகமற்ற விடயங்களை நம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கச் செல்ல வேண்டாம். நல்லது, கெட்டது தெரியாத இந்தப் பிஞ்சுகளைத் தவறான வழியில் கொண்டு செல்ல கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தால், நாம் அதை முழுமையாகக் கண்டிக்க வேண்டும்.

இத்தகைய விடயங்களை குழந்தைகளுக்கு தேவைப்படும் போது எடுத்துரைக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது. இது கல்வி அல்ல இது திசைதிருப்பும் செயலாகும்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27ஆம் திகதி முதல் இந்தப் பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட உள்ளனவாம். "நாகரிகமான ஒர் அரசாங்கம் இவ்வாறான விடயங்களுக்கு எப்படி இடமளிக்கிறது? நம் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் அழிக்க அனுமதிக்க முடியாது.

நம் நாட்டை ஆளும் தலைவர்கள், "நம் நாட்டின் கலாசாரம், நாகரிகம், மதம் ஆகியவற்றை பாதுகாக்க தைரியமாக முன்னிற்க வேண்டும். இந்த விடயங்களை அமைச்சு அதிகாரிகளின், சில மருத்துவ சங்கங்களின் அல்லது சில சட்டத்தரணி சங்கங்களின் விருப்பப்படி திசை திருப்ப இடமளிக்க வேண்டாம் - என்றார். (அ)

போதைப்பொருட்களுடன் 994 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ. 10

நாடு முழுவதும் போதைப் பொருளை தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 994 சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கைகளில் 5 கிலோ கிராம் 782 கிராம் ஹெரோயின், 827 கிராம் ஐஸ், 71 கிலோ கிராம் 682 கிராம் கஞ்சா, 2 இலட்சத்து 75 ஆயிரம் 501 கஞ்சா செடிகள், 4 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 25 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 637 போதை மாத்திரைகள் மற்றும் ஒரு கிலோகிராம் 585 கிராம் மாவா என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கைதானவர்களில் ஐவரை மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

எம். ஐ. 17 ஹெலிகளை திருத்த அமைச்சரவை அங்கீகாரம்?

-ரூ. 540 கோடி செலவாகும் என மதிப்பீடு -

கொழும்பு, நவ. 10

விமான படையின் எம். ஐ.-17 ஹெலிகொப்டர்கள் நான்கை பழுதுபார்ப்பதற்கான கேள்விப்பத்திரத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தப் பழுதுபார்த்தலுக்கு 540 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் ஏனைய அவசர தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த ஹெலிகொப்டர்களை பழுதுபார்க்கும் திட்டங்கள் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்து வரும் அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் வெளியிடப்படும் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த பழுது பார்த்தலுக்கான கேள்விப்பத்திரங்கள் பொஸ்னியாவின் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இந்த ஏலங்கள் முதலில் அழைக்கப்பட்ட போதிலும், அதிகாரத்துவ தடைகள் காரணமாக இந்த செயல்முறை தாமதமான தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

அரசியலில் எதிர்க்கட்சியினர் வங்குரோத்து அடைந்துள்ளனர்

கொழும்பு, நவ. 10

"அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ள எதிர்க்கட்சியினர் வரவு - செலவு திட்டம் தொடர்பில் போலியான விடயங்களை குறிப்பிடுகிறார்கள். வரவு - செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிச்சயம் செயல்படுத்துவோம்", என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் பற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். ஆம், அவர்கள் குறிப்பிடுவதும் உண்மையே அவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு வரவு -செலவுத்திட்டத்தில்ஏதுமில்லை. மக்களை போலியாக ஏமாற்றாமல், நிலையான பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வரவு - செலவு திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

பாம்பு காட்டி மக்களை ஏமாற்றிய ஊடக நிறுவனத்தின் தலைவர் பாராளுமன்றத்தில் உள்ளார். இந்த ஊடகம் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான செய்திகளை வெளியிடும் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறிப்பாக ஆளும் தரப்பினருக்கு கெப் ரக வாகனம் வழங்க 1,250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இது முற்றிலும் பொய்யானது. பொய்யை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்படும் ஊடகத்தின் செய்திகளுக்கு மக்கள் அவதானம் செலுத்தக்கூடாது - என்றார்.

ஹெரோயினுடன் 6 இலங்கையர் கைது

கொழும்பு, நவ. 10

300 கிலோ ஹெரோயின், ஐஸ் போதைப் பொருட்களுடன் 6 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாலைதீவு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் பயன்படுத்திய நெடுநாள் மீன்பிடி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

ஆபாச காணொலி தயாரித்த தம்பதி கைது

கொழும்பு, நவ. 10

இணையத்தளம் ஒன்றுக்கு தமது ஆபாச காணொலிகளை பதிவு செய்து வழங்கி வந்த தம்பதியை நுகேகொடை வலய சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் கைது செய்துள்ளது.

கைதான கணவர் தனியார் பல்கலைக்கழகமொன்றில் கணினி பொறியியல் பட்டம் பெற்றவர் என்றும் மனைவி உளவியல் ஆலோசனை டிப்ளோமா பெற்றவர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நிதி நெருக்கடியால் பிரித்தானியாவை மையமாகக் கொண்ட குறித்த வலைத்தளத்துடன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒப்பந்தம் செய்து மாதத்துக்கு 8 காணொலிகளை இந்தத் தம்பதி வழங்கி வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அவர்களுக்கு மாதமொன்றுக்கு சுமார் 1.5 இலட்சம் தொடக்கம் 2 இலட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் மொத்தம் 334 ஆபாச காணொலிகளை பதிவேற்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த காணொளிகளை அவர்கள் வெலிக்கடையிலுள்ள தமது மூன்று மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் பதிவு செய்துள்ளனர். (ஐ)

வரிகளின் பதிவு வரம்பை குறைப்பதற்கு அரசு திட்டம்

கொழும்பு, நவ. 10

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியின் பதிவு வரம்பைக் குறைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின்கீழ், சுமார் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் புதிய வரி கோப்புகள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது அரசுக்கு 15 ஆயிரம் கோடி ரூபாய்களுக்கும் அதிகமான வருவாயை இலக்காகக் கொண்டுள்ளது. 2026 பாதீட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றின் வருடாந்த வரம்புகள் 6 கோடி ரூபாய்களிலிருந்து 3.6 கோடி ரூபாய்களாக குறைக்கப்படும் என்று முன்மொழியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வரி நிகர அடிப்படையில் வணிக நிறுவனங்கள் ஒருநாளைக்கு சராசரியாக ஒரு இலட்சம் ரூபாயை வருமானமாக ஈட்டுமானால் அவை குறித்த வரிக்கு உட்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாதீடு நிறைவேற்றப்பட்டதும் அடுத்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இது நுகர்வோருக்கு சுமையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும், வர்த்தகர்கள், குறித்த வரிச்சுமையை நுகர்வோருக்கு சுமத்துவார்கள் என்று தாம் நினைக்கவில்லை என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரி ஒருவர் ஊடகம் ஒன்றிடம் கருத்துரைத்துள்ளார்.

கடந்த ஆண்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி இலக்கு 2 இலட்சத்து 8 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக இருந்தது. எனினும், இதுவரை இலக்கில் 88 சதவீதம் எட்டப் பட்டுள்ள தாகவும், நிர்ணயிக்கப் பட்ட இலக்குகளை இந்த வரு டத்துக்குள் எட்ட முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்:

அனர்த்தங்களால் ஏற்படும் இடையூறை தடுக்க ஏற்பாடு

கொழும்பு, நவ. 10

உயர்தர பரீட்சை காலத்தில் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய இடையூறுகளை தடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன இணைந்து விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளன.

சீரற்ற வானிலையால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் காரணமான உயர்தர பரீட்சார்த்திகள் எதிர்கொள்ளும் இடையூறை தடுப்பதே இந்த திட்டத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அனர்த்த சூழ்நிலை காரணமாக பரீட்சார்த்திகளுக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால், 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 1911 என்ற பரீட்சை கள் திணைக்களத்துக்கு அறிவிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர நடவடிக்கை பிரிவில் நிறுவப்பட்டுள்ள தேசிய பரீட்சை அவசர நடவடிக்கை பிரிவின் விசேட தொலைபேசி எண்களான 011 366 8026, 011 366 8032, 011 366 8087, 11 366 8119 ஆகிய தொலைபேசி எண்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் தேவையான ஒருங்கிணைப்பு உதவியைப் பெறலாம் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் உள்ள 2,362 பரீட்சை நிலையங்களில் உயர்தர பரீட்சை நடைபெறவுள்ளது. (ஐ)

வாகன குத்தகை விகிதம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

கொழும்பு, நவ. 10

வாகனங்களுக்கு பொருந்தக்கூடிய அதிகபட்ச குத்தகை விகிதங்களை திருத்தியமைக்க இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

இதன்படி, வணிக வாகனங்களுக்கான அதிகபட்ச விகிதம் 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தனியார் வாகனங்களுக்கான வரம்பு 50 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை மாதம், மத்திய வங்கி வணிக வாகனங்களுக்கு 80 சதவீதம் வரை, தனியார் வாகனங்களுக்கு 60 சதவீதம் வரை, முச்சக்கர வண்டிகளுக்கு 50 சதவீதம் வரை மற்றும் பிற வாகனங்களுக்கு 70 சதவீதம் வரை குத்தகை வசதிகளை அனுமதித்திருந்தது.

இருப்பினும், புதிய திருத்தத்தின் கீழ் ஜூலையில் அறிமுகப்படுத்தப்பட்ட4 பிரிவுகள் இரண்டு முக்கிய குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலையக மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி"

கொழும்பு, நவ. 10

பாமர மக்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரவு- செலவு திட்டமாக இதைப் பார்க்கலாம் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மலையக தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக பல போராட்டங்களை நடத்திய கட்சியாக நாங்கள் இருக்கிறோம். வரவு- செலவு திட்டம் ஊடாக மலையக மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றே கூறலாம்.

உண்மையில் மலையக மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைத்துள்ளது. சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. பெருந்தோட்ட கம்பனிகளுடனான நீண்ட பேச்சுவார்த்தை மூலம் இறுதியாக வெற்றி பெற்றிருக் கிறோம் என அவர் தெரிவித்தார்.(எ)

தொழிலாளர்களின் சம்பள உயர்வு: பட்டாசு வெடித்து கொண்டாட்டம்

ஹற்றன், நவ. 10

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு, ஹற்றன் நகர மக்கள் பட்டாசு வெடித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம், பெருந்தோட்டத் துறையின் குறைந்தபட்ச ஊதியத்தை 1,550 ரூபாயாக உயர்த்தவும் அத்துடன் கூடுதலாக 200 ரூபாய் ஊக்கத்தொகை கொடுப்பனவை வழங்கவும் ஜனாதிபதி எடுத்த முடிவுக்கு ஹற்றன் நகர மக்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஹற்றன் நகரத்தில் நிலவும் கடுமையான போக்கு வரத்து நெரிசலுக்கு அவசர தீர்வுகளை வழங்குவதற்காக இந்த ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யும் திட்டமும் குடியிருப்பாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதமாக, ஹற்றன் நகர மக்கள் நகர மையத்தில் பட்டாசுகளை கொளுத்தினர்.(எ)

சைப்ரஸ் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

ஹற்றன், நவ. 10

ஹற்றன்- மஸ்கெலியா பிரதான வீதியில் வனராஜா பகுதியில் ஒரு சைப்ரஸ் மரம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.15 மணியளவில் விழுந்தது.

மரம் விழுந்ததால் வீதியில் வாகன போக்குவரத்து சுமார் 40 நிமிடங்கள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

இருப்பினும், வனராஜா தோட்ட கிராம மக்களும் ஹற்றன் பொலிஸாரும் விழுந்த மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

இதனையடுத்து குறித்த வீதி வாகன போக்குவரத்துக்கு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வீதியோரமாகவுள்ள ஆபத்தான பாரிய மரங்களை வெட்டி அகற்ற வேண்டும் என வாகன சாரதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ)

ஹெரோயினுடன் மூவர் கைது

கொழும்பு, நவ. 10

சீனிகம பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் மூன்று பேர் கைதாகினர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் தென் மாகாண விசேட நடவடிக்கைப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தச் சந் தேகநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 5 கிலோ 416 கிராம் ஹெரோயினை பொலிஸார் மீட்டுள்ளனர்.அத்துடன், சந்தேகநபர்களிடமிருந்து பெருந்தொகை பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.கைப்பற்றப்பட்ட இந்த போதைப்பொருள் அண்மையில் தங்காலைக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப் பட்ட ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் தொடர்புடையது என ஆரம் பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

662 மில்லியன் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளுடன் மூவர் கைது

கொழும்பு, நவ. 10

சட்டவிரோதமாக வல்லப் பட்டையை தம்வசம் வைத் திருந்த 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாத்தறை, கொட்டபொல பகுதியில் தெனியாய வனப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சோதனையில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 110 கிலோ 450 கிராம் வல்லப் பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 662 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

(எ)

ஓட்டோ விபத்து: மூவர் படுகாயம்

நுவரெலியா, நவ. 10

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் பங்கலாவத்த பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற் பகல் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், தலவாக்கலை பகுதியில் இருந்து உடப்புசல்லாவ நோக்கிப் பயணம் மேற்கொண்ட ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்த நிலையில் குறித்த விபத்தில் ஓட்டோவுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

போதைப்பொருள் விற்பனை மஹரகம அக்கா சிக்கினார்

நுவரெலியா, நவ. 10

நுவரெலியா, வெலிமடை, பண்டாரவளை மற்றும் கெப்பெட்டிபொல ஆகிய பகுதிகளில் ஈஸி கேஷ் முறையைப் பயன்படுத்தி போதைப்பொருள் விற்பனை செய்து வந்த "மஹரகம அக்கா" என அடையாளம் காணப்பட்ட 50 வயதுடைய பெண் ஒருவர், நுவரெலியா பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் விற்பனை வலையமைப்பை விசாரித்ததில், அந்தப் பெண் நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் வாடிக்கையாளர்களுடன் ஈஸி கேஷ் வழியாகப் பணப் பரிமாற்றம் செய்து வந்தது கண்டறியப்பட்டது.

மேலும், போதைப்பொருள் வாங்கியவர்களின் தொலைபேசிப் பதிவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது, சந்தேக நபர் ஹங்வெல்ல பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தது தெரியவந்தது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, நவம்பர் 6 ஆம் திகதி வியாழக்கிழமை நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், அவருடைய இல்லத்தில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 1,41,000 ரூபாய் பணம் மற்றும் 32 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டன.

சந்தேக நபர் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், ""மஹரகம அக்கா" நீண்டகாலமாக நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் இரகசியமாக போதைப்பொருள் விற்பனை செய்து வந்திருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ)

வர்த்தக நிறுவன உரிமையாளர்களுக்கு சம்மாந்துறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சம்மாந்துறை, நவ. 10

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட செயலக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் விசேட விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் வழிகாட்டலில் நடைபெற்ற இந்தச் செயலமர்வின் பிரதான வளவாளராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரி முஹம்மட் ஸாஜித் ஸமான் அத்துடன் புலனாய்வு அதிகாரிகளான எம்.எம்.எம் பஸ்மீர்,எ.பி.எம் இர்பான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போ தைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக வியாபாரிகளுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது.(எ-01)

நீரில் மிதந்த நிலையில் சடலம் மீட்பு 2000 லீற்றர் கசிப்பு கைப்பற்றல்

திருகோணமலை, நவ. 10

கிண்ணியா- ஈச்சந்தீவு பகுதியில் நீரில் மிதந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த கும்பலை கடற்படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

இதன்போது, தப்பிச்சென்ற ஒருவரே சடலமாக மீட்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பின் போது சுமார் 2000 லீற்றர் கசிப்பினை யும் அதனை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங் களையும் கிண்ணியா பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் போதூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேல திக விசாரணைகளை கிண்ணியா

பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

நீச்சல் தடாகத்தில் மூழ்கி ஐந்து வயது சிறுவன் பலி

தம்புள்ளை, நவ. 10

சிகிரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவுடங்காவ பகுதியில் ஹோட்டல் ஒன்றிலுள்ள நீச்சல் தடாகத்தில் மூழ்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் களனி - தலுகம பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுவனே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் தனது பெற்றோருடன் நீச்சல் தடாகத்தில் நீராடியபோது இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் தம்புள்ளை மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்...

அந்தக் கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

ரெலோ கட்சியின் தலைமைக்குழு கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் நிறைவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த சில வாரங்களாக திட்டமிட்ட வகையில் சில முகநூல்களிலும் இணையத்தளங்களிலும் எமது கட்சிக்கு எதிராக அல்லது கட்சியை களங்கப்படுத்தும் வகையில் சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, விமர்சனங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அது சம்பந்தமாக ஆராய்ந்திருந்தோம்.

எங்கள் கட்சிமீது காழ்ப்புணர்ச்சி கொண்ட அல்லது அரசியல் ரீதியாக திட்டமிட்டு எங்கள் கட்சியின்மீது சேறு பூச வேண்டும் என்று அல்லது அரசியல் ரீதியாக எங்களை தாக்க வேண்டும் என்று திட்டமிட்டவர்கள் ஊடாகவே இந்த விடயம் பிழையான ஒரு பிரசாரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையா இல்லையா என்பதை ஆராய்வதற்காக தலைமைக் குழுவில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த விடயங்களை ஆராய்ந்து பேராளர் மாநாட்டிலே இது சம்பந்தமான வெளிப்படுத்தலை செய்வார்கள்.

பொதுவாக கடந்த கால தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு பின்னராக பல தடவைகள் எங்களுடைய கட்சி கூடி ஆராய்ந்துள்ளது. மாவட்ட ரீதியான, தொகுதி ரீதியான, வட்டார ரீதியான கட்சி கட்டமைப்பையும் இதேபோன்று தலைமைக்குழுவில் இளைஞர்களுக்காக இடைவெளியை அதிகரித்து புதியவர்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் நாங்கள் எடுத்திருக்கிறோம். இது சம்பந்தமாகவும் தலைமைக்குழுவில் தீர்மானிக்க முடியாது. ஆகவே, அதை நாங்கள் பேராளர் மாநாட்டிலேதான் அப்படியான மாற்றங்களையும் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்திருக்கிறோம்.

பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்ற கட்சியின் உறுப்பினர்களின் கைகளிலேதான் அந்த விடயங்களைக் கையளிப்போம். பேராளர் மாநாட்டை ஜனவரி 2026இற்குள் அனைத்து மாவட்டத்தின் உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து இது சம்பந்தமான முடிவுகளை எட்டி எங்களுடைய கட்சியை மேலும் பலப்படுத்தி பயணிப்பதற்கான தீர்மானத்தை எடுத்திருக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயல்படுவது தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஓர் அழைப்பை விடுத்திருந்தது. அதைப் பற்றி நாங்கள் பேசியிருந்தோம். நாங்கள் அந்த முடிவை அறிவிப்பதற்கு முன்னதாக அவர்களுடைய நிபந்தனை என்ன என்பதை அறிய வேண்டும். நாங்கள் ஜனநாயக தமிழ் தேசிய் கூட்டணியாக இன்று பயணித்துக் கொண்டிருக்கிறோம். இதேபோன்று தமிழ்த் தேசிய பேரவையுடன் நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பதால் அவர்களோடும் கலந்தாலோசிக்க வேண்டும்.

இந்த ஒற்றுமையை நாங்கள் நேசிக்கிறோம். இந்த அரவணைப்பை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரம் இதை எப்படி செயல்படுத்துவது என்பது எங்களுடைய அங்கத்துவ கட்சிகளோடு கலந்து ஆலோசித்தே முடிவை அறிவிப்பதாக இருக்கிறோம் - என்றார். (ஐ)

வரவு...

பணிமனையை திறந்து வைக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்வைத்த இந்த இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தில் வளமான நாடு அழகான வாழ்க்கைக்கான வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இன்று செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை மக்கள் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்வைத்த 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்துக்கு பதிலாக "பொய்களின் மூட்டையை" முன்வைத்துள்ளார். அந்தத் திட்டம் மக்களை ஏமாற்றும் நோக்குடன் பொய்யான வாக்குறுதிகள் மற்றும் தவறான தகவல்களை கொண்டிருக்கின்றன. இந்த இரண்டாவது வரவு செலவுத் திட்டம், வளமான நாட்டுக்கான திட்டம் அல்ல, மாறாக கவனமாக வடிவமைக்கப்பட்ட அரசியல் நாடகமாகும்.

தேர்தல் பிரசாரத்தின்போது தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளுடன் வரவு - செலவு திட்டத்தில் உள்ள வாக்குறுதிகளையும் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தால் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே தெளிவான முரண்பாடு இருப்பதை அறியலாம். ஜனாதிபதி புன்னகையுடனும் அமைதியான குரலுடனும் இதை முன்வைத்தாலும், இந்த வரவு - செலவு திட்டம் பொய்களின் ஒரு கட்டு மட்டுமே. மக்கள் உதவியின்றி தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், அரசாங்கத்தின் இருப்பை நீடிக்கும் நோக்குடன் ஏமாற்றமும் நேர்மையின்மையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிறைந்துள்ளது

அரசாங்கம் "கோயபல்ஸ் கோட்பாட்டின்" கீழ் இயங்குகிறது. அதாவது பொய்கள் உண்மை என்று தோன்றும்வரை திரும்பத் திரும்பக் கூறி வருகிறது. இவ்வாறு பொய்களைக் கூறி தொடர்ந்தும் ஆட்சியில் தொங்கிக் கொண்டிருக்கலாம் என்று கருதி வருகிறதோ தெரியாது. (ஐ)

போதைப்பொருட்களுடன்...

மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதிகளில் முன்னெடுத்த விசேட நடவடிக்கைகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

10 பேர் ஐஸ் போதைப்பொருளுடனும் 9 பேர் போதை மாத்திரைகளுடனும் 4 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டனர். போதை மாத்திரைகளுடன் கைதானவர்களில் ஒருவர் 17 வயது சிறுவன் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான அனைவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

தொல்பொருள்...

சுமங்கல நாயக்க தேரர், கல்வெவ விமலகாந்த தேரர், பேராசிரியர் பி. பி. மண்டாவல, பேராசிரியர் சேனரத் திஸநாயக்க, பேராசிரியர் ஜகத் வீரசிங்க, பேராசிரியர் கருணாசேன ஹெட்டியாராச்சி, பேராசிரியர் மங்கள கட்டுக்கம்பொல, பேராசிரியர் ஆர். எம். எம். சந்திர ரத்ன சிரேஷ்ட பேராசிரியர் மாலிங்க அமரசிங்க, சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, பேராசிரியர் சமித்த மானவடு, கலாநிதி என். டி. எம். பி. டீ. கமகே, கலாநிதி பி. டி. நந்ததேவ, கலாநிதி கமினி விஜயசூரிய, கலாநிதி அருண ராஜபக்ஷ, ஹேமந்த குமார பாலச் சந்திர (கட்டடக் கலைஞர்) ஆகியோர் உறுப்பினர்களாக செயல்படுவர்.

இந்தக் குழு 2025 மார்ச் 10 ஆம் திகதி முதல் 2027 மார்ச் 9 ஆம் திகதி வரை இரண்டு ஆண்டுகள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உயர்தர...

என்று பரீட்சைகள் திணைக் களம் அறிவித் துள்ளது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 362 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. 2 இலட்சத்து 46 ஆயிரத்து 521 பாடசாலை பரீட்சார்த்திகளும் 94 ஆயிரம் தனியார் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 521 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டையைப் கிடைக்காதவர்கள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்துக்குச் சென்று அதனைப் பதிவிறக்கம் செய்யலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

மின்னணு கடிகாரங்கள், பிற மின்னணு உபகரணங்கள், கைபேசிகள் ஆகியவற்றை பரீட்சை மண்டபத்துக்குள் கொண்டு செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

சர்வகட்சி...

தெரிவித்தன.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எந்த முறைமையின்கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என்று பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். கட்சிகளின் தலைவர்கள்கூடி பொருத்தமான முறைமை தொடர்பில் தீர்மானம் எடுத்தால், அதற்கமைய தேர்தலை நடத்த முடியும் எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இந்தநிலையிலேயே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுக்கவுள்ளார் என்றும் அறியவருகிறது. (ஐ)

தோட்ட...

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அறிவித்தமைக்கு அமைவாக அடிப்படை வேதனமாக ஆயிரத்து 550 ரூபாய் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும். அத்துடன், 200 ரூபாய் வருகைக் கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடி விரைவில் தீர்மானிக்கப்படும் - என்றார்.

முன்னதாக, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வேதனமாக ஆயிரத்து 550 ரூபாயும், வருகைக் கொடுப்பனவாக 200 ரூபாயும் வழங்கப்படுமென அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

மானிப்பாய்...

செய்யப்பட்ட ஆண்கள் இருவர், பெண் ஒருவர் என மூவரையும் கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழு மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொட்டாஞ்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரை சுட்டுக் கொன்றவர்கள் கார் மூலம் யாழ்ப்பாணம் வந்து மறைந்திருந்த நிலையில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டபோது ஆடைகள் எதுவும் இல்லாதநிலையில் இருந்தனர் என்றும் அவர்களின் காரில் வெளிநாட்டு இன நாய் ஒன்றும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

யாழ்...

அடியில் மறைத்துவைக்கப்பட் டிருந்த கைத்துப் பாக்கி மீட்கப்பட்டது.

இதையடுத்து, கார் சாரதி கைது செய்யப்பட் டார். அவரிடம், நடத்தப் பட்ட விசாரணையில் அந்தக் கைத்துப்பாக் கியை இன்னொருவரிடம் கொடுக்கவே தாம் கொண்டு சென்றுள்ளார் என்று கூறியுள்ளார்.

அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த நபரும் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைதான இருவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 33 வயதுடைய வர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

வலிப்பால்...

துவாரகன் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் கடந்த 7ஆம் திகதி காலை வலிப்பு ஏற்பட்டது. சுமார் ஒரு மணி நேரத்தில் அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் இறப்பு அதிகாரி ந. பிறேம்குமார் நடத்தினார். (ஐ-05)

போதைப்பொருள்கள்...

பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார். 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய நிகழ்ச்சி திட்டம் கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று நடை பெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கடந்த வெள்ளிக் கிழமை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தங்கள் செயல்பாடுகளின் இடங்களை வெளிப்படுத்தினர் என்றும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொண்டனர் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட 200 பேர் வெளிநாடுகளில் மறைந்துள்ளனர். இவர்களில் 80 பேர் பெரும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட - திட்டமிட்ட குற்றக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இவர்களில் பலர் அந்தந்த நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள னர். இவ்வாறு கைதானவர்கள நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தேவையான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

இலஞ்ச...

படுகொலையா ளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் தெளி வாக அறிவித்துள்ளது. நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர் களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை. இலஞ் சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு ஊடக கண்காட்சியை மாத்திரம் நடத்துகிறது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸ நாயக்க முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்டார் என்பதை பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். இந்த நியமனத்தின் போது அரசமைப்பு பேரவைக்கும் பொய்யுரைக்கப் பட்டுள்ளது.

வெட்கம் என்பதொன்று இருக்குமாயின் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க பதவி விலக வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் மாதவ தென்னக்கோனை இந்த பதவிக்கு நியமிக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

தமிழரை இனியும் ஏமாற்றினால் இலங்கை வேறுதிசைக்கு செல்லும்

சிறீதரன் எம். பி. எச்சரிக்கை

கொழும்பு, நவ. 10

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளைக்கூட நடை முறைப்படுத்த அரசாங்கம் மறுப் பது மிகவும் ஆபத்தான விடயம். இனிமேல் தமிழர்கள் அரசியல் தீர்வு கேட்கமாட்டார்கள் என்று நினைத்தால் நீங்கள் செய்யும் மிகப்பெரிய வரலாற்றுத் தவறா கவே அமையும். இனியும் எம்மை ஏமாற்ற முற்பட்டால் இலங்கை வேறொரு திசைக்கு செல்லும் என்பதனை எச்சரிக்கையாக கூறுகிறேன் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் சிறீதரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வரவு - செலவுத் திட்டத்தில் இனப்பிரச்னைக்கான தீர்வுகளை காண்பதற்கோ அல்லது வடக்கு, கிழக்கிலே வாழ்கின்ற தமிழ் மக்க ளின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கான ஒரு தளத்தை உரு வாக்குவதற்கோ ஜனாதிபதியிடம் எந்தவிதமான கருத்துகளும் இல்லை.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக ஜனாதி பதி ஒரு சுவாரஷ்ய விடயத்தை குறிப்பிட்டார். ஆனால், தேர்தலை எப்படி, எந்த முறையில் நடத்தலாம் என்பதனை பிறகு பேசலாம் என்ற வாறாகக் கூறினார். இந்த பாராளு மன்றத்தில் அதிக ஆசனங்களாக 159 ஆசனங்கள் ஆளும் தரப்பில் உள்ளது.

ஒரு சட்டமூலத்தில் திருத்தம் கொண்டு வந்து மாகாண சபைகள் ஆட்சி முறையை நடத்துவதற்கு ஏன் நீங்கள் தயங்குகிறீர்கள்? தயக் கத்துக்கான காரணம் என்ன? நீங் கள் வெளிநாடுகளுக்கு சென்று இங்கு யுத்தம் நடக்கவில்லை, இன வழிப்பு நடக்கவில்லை, போர்க் குற் றங்கள் நடக்கவில்லையென கூறுகி றீர்கள். சர்வதேச விசாரணை வேண் டாமென மண்டியிடுகிறீர்கள்.

இவ்வாறான குற்றங்கள் நடக்க வில்லையென்றால் ஏன் நீங்கள் விசாரணைகளுக்கு தயங்க வேண் டும்? நேர்மையும் நெஞ்சுரமும் உங்களிடம் இருந்தால், நீங்கள் ஒரு தைரியமான இனமாக இருந்தால், நீங்கள் குற்றம் செய்யவில்லை என்றால் விசாரணைகளை ஏன் நீங்கள் தடுக்க வேண்டும்? ஒருபுறம் இவ்வாறான விசாரணைகளைத் தடுத்துக் கொண்டு மறுபுறம் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கும் ஆனால், நடக்காது என் கிறீர்கள்.

இதுதான் ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்ட அறிவிப்பு. கார ணம் இந்த நாட்டில் தமிழர்களை நீங்கள் தோல்வியடைந்த ஒரு இனமாக கையாளப் பார்க்கிறீர்கள். நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்ற உங்களின் மனநி லையை எம்மால் உணரமுடிகின் றது. இது நல்லதல்ல உங்களுக்கு இன்று பெரும்பான்மை இருக்க லாம். ஆனால், உங்களைவிட பெரும்பான்மையுடன் வந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. அவர் வந்த வரத்தென்ன... போன போக் கென்ன... ஆகவே ஆட்சியென்பது நிலையானதல்ல. நீதியும் தர்மமும் அறமும் நிலைக்காத வரைக்கும் இந்த நாடு ஒரு அழிவுப் பாதைக்கே போகும் - என்றார். (ஐ)

மலசலகூடக் குழியிலிருந்து எலும்புக்கூடு ஒன்று மீட்பு!

கொழும்பு, நவ. 10

ஒருவரை கொன்று அவரின் சடலத்தை மலசலகூடக் குழியில் போட்டு மூடப்பட்ட நிலையில் ஒரு வருடம் கழித்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கம்பஹா - இந்துருக்கல்லை பகுதியில் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் பொலிஸாரால் தோண்டி எடுக்கப்பட்டது.

61 வயது நபரின் எலும்புக்கூடே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது. இந்தக் கொலை கடந்த 2024 செப்ரெம்பர் 8ஆம் திகதி இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

குறித்த நபர் காணாமல் போனமை தொடர்பில் அவரின் சகோதரர் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பில் நடத்தப் பட்ட விசாரணைகளிலேயே அவர் கொல்லப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில் அவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

கொலையானவரும் சந்தேகநபர்களும் மது விருந்தின் போது வாக்குவாதப்பட்டனர் என்றும் வாக்குவாதம் முற்றிய நிலையில் அவர் கொல்லப்பட்டார். இதன் பின்னர் அவரின் சடலத்தை மலசலகூடக் குழியில் போட்டு மூடினர் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

அதிக குற்ற சம்பவங்கள் நிகழும் 6 பொலிஸ் பிரிவுகள் அடையாளம்

கொழும்பு, நவ. 10

மேற்கு, தெற்கு மாகாணங்களில் உள்ள 6 பொலிஸ் பிரிவுகளை அதிக குற்றச்செயல்கள் நடைபெறும் மண் டலங்களாக அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜய பால தெரிவித்துள்ளார்.

இந்த இடங்களில் குற்றச் செயல்களைத் தடுக்க அர சாங்கம் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது . வழக்க மான பொலிஸ் ரோந்துகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும், கண்காணிப்புக்காக சாதாரண உடையில் அதிகாரிகள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் அர்ப்பணிப் புள்ள எலைட் பொலிஸ் மோட்டார் சைக்கிள் பிரிவுகள் அமைக்கப்படுகின்றன.

அதிக குற்றப் பிரிவுகளில் இலக்கு வைக்கப்பட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில், நாடு முழுவதும் உள்ள பொலிஸார் சட்டவிரோத ஆயு தங்கள் மற்றும் கடத்தல் பொருட்களைக் கண்டறிய வீடுகள், வாகனங்கள் மற்றும் நபர்களிடம் சோதனைக ளையும் நடத்தி வருகின்றனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

இனி தகுதி அடிப்படையிலேயே அரச ஊழியர் உள்வாங்கப்படுவர்

பிரதி அமைச்சர் ருவான் செனரத்

கொழும்பு, நவ. 10

எதிர்காலத்தில் தகுதி அடிப்படையிலேயே அரச ஊழியர்கள் உள்வாங்கப்ப டுவார்கள் என்று பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றி யபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த நாட்டில் அரச துறையானது கடந்த காலங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்டு அரசியல் பிரசாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இவ்வாறு சீரழிக்கப்பட்ட அரச சேவை பின்னர் பய னற்ற ஒரு சேவையாக மாறிவிட்டது. இதன் காரணமாக சேவையில் பொருத்தமான அரச ஊழியர்கள் இல்லை. எனவே, எதிர்காலத்தில் இது போல அரச துறைக்குள், அரசியல் ரீதியான செயல்படுகளுக்கும் சீரழிவுகளுக்கும் இடமில்லை என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்காலத்தில் தகுதிகளின் அடிப்ப டையில் மட்டுமே அரச ஊழியர்களுக்கான வேலைகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

வருமான இலக்கை இன்னமும் 3 நாட்களில் எட்டும் சுங்க பிரிவு!

கொழும்பு, நவ. 10

இந்த வருடத்துக்கான தமது எதிர்பார்த்த வருமான இலக்கை இன்னும் 3 நாட்களுக்குள் எட்டிவிடும் என எதிர்பார்ப்பதாக இலங்கை சுங்கத் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதனிடையே, சுங்கத் திணைக்களம் கடந்த 6ஆம் திகதி மட்டும் 2 ஆயிரத்து 770 கோடி ரூபாயை வருமா னமாக ஈட்டியுள்ளது. சுங்கத் திணைக்களத்தின் வரலாற் றில் ஒருநாளில் பதிவான அதிகபட்ச வருமானமாகவும் இது அமைந்துள்ளது என்று பணிப்பாளர் சந்தன புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார். (ஐ)

அஸ்வெசும நலன்புரி திட்டம் தகவல் புதுப்பிப்பு ஆரம்பம்!

கொழும்பு, நவ. 10

அஸ்வெசும வருடாந்த தகவல் புதுப்பிப்பு பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் அஸ்வெசுமவில் முதன்முறை யாகப் பதிவுசெய்து தற்போது கொடுப்பனவுகளை பெறும் மற்றும் பெறாத குடும்பங்கள் மற்றும் தனிந பர்கள் இந்த புதுப்பிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் மனக்குறை களை தெரிவித்த விண்ணப்பதாரர்களுக்குத் தகவல்களை புதுப்பிக்க வேண்டிய கட்டாயமில்லை. அதற்குக் காரணம், அந்த விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே தகவல் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

மேலும், தகவல்களை மீண்டும் உறுதிப்படுத்தும் போது, குடும்ப உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் செயல்படக் கூடிய கைபேசி இலக்கம் என்பன இருப்பது அத்தியாவசியமாகும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணைய இணைப்புள்ள கணினி அல்லது ஸ்மார்ட் கைபேசி மூலம் https://eservices.wbb.gov.lk என்ற இணைய முகவரிக்குச் சென்று, ஞசுதாளில் குறிப்பிடப் பட்டுள்ள தமது வ.வ இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தித் தகவல் முறைமைக் குள் உட்பிரவேசித்து, தகவல் உறுதிப்படுத்தல் மெனுவுக் குச் சென்று குடும்பத் தகவல்களை உள்ளிடலாம்.

அவ்வாறு இல்லையெனில், பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுத் தகவல் பிரிவுக்குச் செல்வதன் மூலமாகவோ அல்லது கிராம உத்தியோகத்தர் ஊடாக ஆண்டுத் தகவல் புதுப்பிப்பு விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுப் பிரிவில் சமர்ப்பிக்கலாம். இதன்படி, அஸ்வெசுமவின் முதல் கட் டத்தில் உள்ள அனைத்து குடும்பங்களும் தனிநபர்களும் தகவல் புதுப்பித்தலில் பங்கேற்பது கட்டாயமாகும். (ஐ)

எதிர்க்கட்சிகளை இலக்காக்கி நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை

பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, நவ. 10

சட்டம் அனைவருக்கும் பொதுவான வகையில் பார பட்சமின்றி செயல்படும் போது அதனை ஜனநாயகத் துக்கு விரோதமான செயல்பாடு என்று எவ்வாறு குறிப்பிடுவது. எதிர்க்கட்சிகளை இலக்காகக் கொண்டு நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. மக்களை இலக்காகக் கொண்டே ஆட்சிக்கு வந்துள்ளோம் - என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அரசாங்கம் ஜனநாயகத்துக்கு எதிராக செயல்படுகிறது. ஜனநாயகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி முறைமையை பலவீனமடைந்துள்ளது எனவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஜனநாயகம் எங்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று எதிர்க் கட்சியினர் குறிப்பிட வேண்டும்.

சட்டம் அனைவருக்கும் பொதுவான வகையில் பாரபட்சமின்றி செயற்படும் போது அதனை ஜனநா யகத்துக்கு விரோத செயற்பாடு என்று எவ்வாறு குறிப் பிடுவது.

பல கட்சி முறைமையை இல்லாதொழிக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது. எதிர்கட்சிகளின் செயல் பாடுகளால்தான் கல்வி முறைமை பலவீனமடையும். எதிர்க்கட்சிகளை இலக்காகக் கொண்டு நாங்கள் ஆட் சிக்கு வரவில்லை. மக்களை இலக்காகக் கொண்டே ஆட்சிக்கு வந்துள்ளோம்.

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அனைத்து இன மக்களும் உள்ளடக்கப் பட்டுள்ளார்கள் - என்றார். (ஐ)

வெளிநாட்டு பணவனுப்பல் மூலம் 652 கோடி டொலர்கள் வருமானம்

கொழும்பு, நவ. 10

இந்த ஆண்டில் முதல் 10 மாதங்களில் வெளிநாட்டு பணம் அனுப்பல் மூலம் 652 கோடி அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய புள்ளிவிபரத் தின்படி கடந்த ஒக்ரோபரில் 71.2 கோடி அமெரிக்க டொலர் வெளிநாட்டு பண அனுப்பல் மூலமாகக் கிடைத்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலப்பகு தியை விட 20.1 வீதம் அதிகரிப்பாகும் என்று இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங் களில் மொத்த சுற்றுலா வருமானம் 247 கோடி அமெரி க்க டொலர் கிடைத்துள்ளது. இது, 2024 இன் முதல் ஒன்பது மாதங்களில் பதிவான 234 கோடி அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீதம் அதிகரிப்பா கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைத்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட் டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org